*5*

# இரட்சிப்பைக் குறித்து தேவனுடைய நித்திய நோக்கம்

## (2:4-10)

*கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதற்கு முன் எபேசியர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை நினைவுபடுத்திய பின்பு, பவுல் அவர்களுக்கு உற்சாகமளிக்கும் வார்த்தைகளைக் குறிப்பிட்டார். மனிதனை இரட்சிப்பதற்கான தேவனுடைய அற்புதமான திட்டதை அவர் விளக்கிச் சொன்னார்.*

### *ஓர் அன்பின் நோக்கம் (2:4)*

**4தேவனோ, இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே.**

*__வசனம் 4.__ எபேசியர்கள் பாவத்தினால் மரித்தவர்களாகி மாம்சத்தின் இச்சையிலே வாழ்ந்து கொண்டிருந்தார்கள் என்பதை பவுல் அறிவித்தபின், "தேவனே" எனும் வார்த்தையினால் பெரியதான நம்பிக்கையையும் ஆறுதலையும் அளிக்கும் வார்த்தைகளைக் கொடுத்தார். தேவனோ, இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே என்று அவர் எழுதினார்.*

*தேவன் முற்றிலும் பரிசுத்தமுள்ளவர். பூர்வாங்க இஸ்ரவேலரிடத்திலும் சரி, நம்மிடத்திலும் சரி, அவருடைய அறிவிப்பு "நான் பரிசுத்தர்" என்பதுதான் (காண்க லேவியராகமம் 11:44, 45; 19:2; 20:26; 1 பேதுரு 1:16). தேவன் பரிசுத்தராயிருக்கிற படியால், அவர் பாவத்தோடு இணைவுபடுத்தப்பட முடி-யாது (ஆபகூக் 1:13) அவர் பாவத்தை நியாயந்தீர்க்க வேண்டும் (ரோமர் 6:23). பரிசுத்தமுள்ள தேவன் பாவத்தை நியாயந்தீர்க்கும் பொருட்டு, அவர் நீதியை சரிகட்டுகிறார் - அது பாவிகளுக்குத் - தகுதியானது தான். ஆகிலும், தேவன் "இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவரும்" தமது நீதியுள்ள கோபாக்கினையை நிறுத்திவைப்பவருமாயிருக்கிறார். சட்டமன்ற விசாரணைக் கூடத்தில், ஒரு நீதித் தீர்ப்பு வழங்கப்பட வேண்டிய ஒரு பிரதிவாதி குற்றமுடையவராய்க் காணப்படினும் அவனுக்கு இரக்கங்காட்டும்படி பரிந்துரைக்கப்படுவான், பிரதிவாதி குற்றமுடையவானாய்க் காணப்பட்டு சட்டத்தின்படி தண்டிக்கப்பட வேண்டியவனாயிருந்தாலும், நீதித்தீர்ப்பை வழங்க வேண்டிய குழு நீதிபதியினிடத்தில் அதை நிறுத்தி வைக்கும்படி வேண்டிக் கொள்வார். தேவனுடைய விசாரணைக் கூடத்தில், நாம் குற்றவாளிகளாய்க் காணப்படுகிறோம், நீதியின்படி நாம் மரணத்துக்குரியவர்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகிலும், தேவன் நமக்கு அளிக்கப் படவேண்டிய*

தண்டனையை தமது இரக்கத்தால் நிறுத்தி வைக்கிறார். நிச்சயித்துக் கொள்ள ஏதுவாக, தேவன் ஒரு பாவியை பிடிவாதமாக தனது பாவத்தில் இருந்துகொள்ள அனுமதித்து நீதியின்படி நித்திய மரணத்தை அடைந்து கொள்ள விட்டு விடுகிறார்; ஆகிலும் (நீதியை) ஏற்றுக் கொள்ள மனதாயிருப்பவர்களுக்கு தேவன் தமது பெரிய இரக்கத்தைக் காட்டுகிறார்.

"தேவனோ" எனும் சொற்றொடர் எபேசியர்கள் ஒரு காலத்தில் இருந்த நிலைக்கும் அவர்கள் என்னவாக மாறியிருக்கிறார்கள் என்பதற்கும் மிகுந்த முரண்பாட்டை அடையாளப்படுத்துகிறது. தேவன் நீதியைச் செலுத்துகிற கோபாக்கினையை உடையவராக மட்டுமில்லாமல், இரக்கத்தின் தேவனுமாயிருக்கிற படியால், தேவன் தாமே முன் வந்து செயல் வடிவம் கொடுத்தார். அவர் தமது ஜனங்களை நித்திய மரணத்திலிருந்து மீட்டுள்ளார் - பாவத்தின் சம்பளத்துக்கு சரிகட்டும் நீதியாக - நமக்கு அவர் ஜீவனைக் கொடுக்கிறார்.

"அவர் நம்மிடத்தில் காட்டிய அன்பினிமித்தம் அந்த மகாபெரிய அன்பு" பாவத்திலே மரித்தவர்களுக்கு தேவன் தமது இரக்கத்தைக் காட்டியிருப்பதை விளக்குகிறது. இரக்கமே பாவிகளிடம் காட்டப்படுகிற தேவனுடைய மனோபாவம். அன்பு அவர் பாவிகளினிமித்தம் செய்கிற செயல் வடிவம். அவர் இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவரும் தமது அன்பிலே அவர் மகா பெரியவருமாய் இருக்கிறார் என்று பவுல் சொன்னார். "அன்பினாலே" என்பது *dia* என்பதன் மொழிபெயர்ப்பு மற்றும் அதன் பொருள் "திருப்திபடுத்தும்படி"[1]; நம்மை திருப்தியாக்கும்படி தேவன் தமது பெரிதான அன்பை இரக்கத்தால் வெளிப்படுத்தினார்.

"அன்பு" எனும் பதத்திற்கு கிரேக்கர்களிடம் ஆங்கிலத்தில் இருப்பது போல, ஒரே வார்த்தை இல்லை. நான்கு வார்த்தைகள் இருந்தன. இந்த வார்த்தைகளின் அர்த்தத்தை வில்லியம் பர்கலே மிகச் சிறப்பாக விளக்கம் கொடுக்கிறார்.[2] (1) ஈராஸ் எனும் சொல் இரு பாலினங்களுக்கிடையே இருக்கிற அன்பைக் குறிக்கிறது. அல்லது மாமிசப்பிரகாரமான அன்பைக் குறிக்கிறது, இந்த அன்பு இச்சைகளுக்குரிய உணர்வையும் தன்னகத்தே கொண்டது, புதிய ஏற்பாட்டில் இந்த அன்பு குறிப்பிடப்படவில்லை. (2) ஸ்டார்ஜ் எனும் பதம் குடும்பப் பாசத்தைக் குறிப்பிடுகிறது. அது பெற்றோர் பிள்ளைகளிடத்தில் காட்டும் அன்பையும் பிள்ளைகள் பெற்றோரிடத்தில் காட்டும் அன்பையும் உட்படுத்தியது. ரோமர் 12:10 ல் இந்த அன்பு பெயரடைப் பண்பைக் குறிக்கும் சொல்லாக கூறப்படுகிறது, இதன் பொருள் "பிறருக்கு செலுத்தும் உணர்வு" ("இரக்கம் காட்டுதல் - பரிவு காட்டுதல்"; KJV). (3) பிலியா எனும் வார்த்தை ஒரு கணவருக்கும் மனைவிக்குமிடையேயான அன்பைக் குறிக்கும் சொல், மற்றும் சிநேகிதர்களுக்கு இடையேயான அன்பு. இந்த அன்பு இயேசு லாசருவிடத்தில் கொண்டிருந்த ஒன்று (யோவான் 11:3, 36) யோவானிடத்திலும் (யோவான் 20:2), தகப்பன், தாய், மகன், மகள் ஆகியோர் ஒருவருக்கொருவர் காட்டும் அன்பு (மத்தேயு 10:37). (4) புதிய ஏற்பாட்டில் பொதுவாக மொழிபெயர்க்கப் பட்டுள்ள "அன்பு" *agapē.* இந்த வார்த்தை கிரேக்க மொழியில் தனித்துவம் பெற்று விளங்கியது அல்ல, ஆனாலும் புதிய ஏற்பாட்டில் "அன்பு" என்பதற்கு திறவுகோல் வார்த்தையாக இது பயன்படுத்தப்பட்டது.

*Agapē* என்பது புதிய ஏற்பாட்டில் 250 முறைகளுக்கு

மேலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அது பெயர்ச்சொற்களாகவும் வினைச் சொற்களாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதுதான் "அன்புக்குச்" சொல்லப்படுகிற மிக முக்கியமான வார்த்தை ஏனெனில் அன்புக்கு புதிய ஏற்பாடு விளக்கமளிக்கும் அனைத்துக் கருத்துகளுக்கும் போதியளவு பெரிய வார்த்தையாக இருப்பது இது மட்டுமே. தேவன் சொல்ல விரும்பியவைகளை வெளிப்படுத்தும் தன்மை *Agapē* எனும் வார்த்தைக்கு மட்டுமே உண்டு. *Agapē* எனும் வார்த்தையின் பொருள் சிநேகிதர்களையும் சத்துருக்களையும் உட்படுத்தி பேச போதிய பொருளைத் தன்னகத்தே கொண்டது. "அன்பைக்" குறிக்கிற மற்ற வார்த்தைகள் தேடப்படாத உணர்ச்சிகளையும் மனக்கிளர்ச்சியையும் - காதல் வசப்படுவது, தாய் தன் பிள்ளையினிடத்தில் கொண்டுள்ள இயல்பான அன்பு ஆகியவற்றைக் குறிக்கும் போது *Agapē* விருப்பத்தை உள்ளடக்கியது. இந்த அன்பு மனமுவந்து எடுக்கும் முடிவின் விளைவாக, எது எப்படியிருந்தாலும் ஒருவர் மற்றவரை நேசிக்கிற தன்மையின் சுபாவத்தை தனது நன்மைக்காக செயல்பட வைப்பது. *Agapē* எனும் பதம் "வேறெதுவாலும் மேற்கொள்ள இயலாத தருமத்தையும் வெற்றிகொள்ள முடியாத நல்ல சித்தத்தையும் தன்னகத்தே கொண்டது."[3] புதிய ஏற்பாடு மனிதனிடத்தில் தேவன் காட்டும் இந்த அன்பு உலகளாவியதும் அர்ப்பணிப்பையுடையதுமாகும் (யோவான் 3:16), தகுதியற்றவனுக்கு காட்டப்படுவது (ரோமர் 5:8), இரட்சிக்கக் கூடியதும் பரிசுத்தமாக்கக்கூடியதுமாகும் (2 தெசலோனிக்கேயர் 2:13) என்று சொல்லுகிறது. எபேசியர் 2:4ல் இது தேவனுடைய இரக்கத்தைக் குறிக்கும் அன்புச் சொல்லாகக் குறிப்பிடப்படுகிறது. *Agapē* என்பது தேவன் பாவிகளுக்குச் செய்துள்ள அனைத்தையும் செயல் தூண்டுதலைக் கொடுப்பது.

## வாழ்வின் நோக்கம் (2:5)

**5 அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்; (கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்).**

**வசனம் 5.** தொடர்ந்து வரும் வசனங்களில், மேற்கொண்டு பவுல் தேவனுடைய கிருபையும் இரக்கமுமுள்ள அன்பை ஜனங்களிடத்தில் அவர் காட்டுவதாக விளக்கப்படுத்துகிறார். வசனம் 1 ல் பவுல் ஆவிக்குரிய மரணத்தைக் குறிப்பிட்டு பாவிகள் [தங்களுடைய] **அக்கிரமங்களில்** மரித்தவர்களாயிருக்கிறார்கள் என்று சொன்னார். அப்படிப்பட்ட பாவிக்கு, தேவன் தம்முடைய இரக்கத்தையும் அன்பையும் அளித்துள்ளார். இங்கே வசனம் 1ல், சொல்லப்பட்ட அதே கிரேக்க வார்த்தையான, பேராப்டோமா, என்பது "அக்கிரமங்கள்" என்ற வார்த்தைக்குப் பதிலாக "மீறுதல்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. **மரித்தவர்களாயிருந்த நம்மை** எனும் பதம் தேவன் எவ்வளவாய் சகல பாவிகளிடத்திலும் அன்புகூர்ந்து இரக்கங்காட்டினார் என்பதை வெளிப்படுத்துகிறது. பாவிகளை இரட்சிக்கத் தேவையான அனைத்தையும் தேவன் செய்து இன்னும் தங்களுடைய பாவங்களில் நிலைத்திருப்பவர்களை இரட்சிக்கிறார்.

இந்தப் பாவிகளை அவர் என்ன செய்தார்? **கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்.** தேவன் நமக்கு கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய ஜீவியத்தை

*அளித்திருக்கிறார். ஆவிக்குரிய மரணம் என்பது தேவனிடத்திலிருந்து பிரிவினையை உண்டாக்குமேயானால் (காண்க 2:1), பின் ஆவிக்குரிய உயிர்த்தெழுதல் தேவனிடத்தில் நம்மை ஒப்புரவாகவும் செய்வதாகும். கிறிஸ்துவே மிகப் பெரிய ஒப்புரவாக்கும் மத்தியஸ்தர். "கிறிஸ்துவின் இரத்தம்" (2:13), அதாவது கிறிஸ்து சிலுவையில் அறையப்படுதல் நம்மை தேவனோடு ஒப்புரவாகும்படிச் செய்ய கிறிஸ்துவுக்கு சாத்தியமாயிற்று என்று பவுல் சொன்னார் (2:16) நாம் பாவத்துக்கு மரித்து, கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, புதிய ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு உயிர்ப்பிக்கப்படும் போது இதை நாம் ஏற்றுக்கொள்கிறோம் (ரோமர் 6:1-4). கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுடனேகூட அவருடைய மரணத்திலும் அவருடைய உயிர்த்தெழுதலிலும் அடையாளப்படுத்தப்படுகின்றனர். இப்படித்தான் நாம் புதிய ஜீவனைப் பெற்றுக் கொள்கிறோம். இந்த சிந்தனையை பவுல் கலாத்தியர் 2:20ல் பற்றிக் கொண்டார். இதைச் சொல்லும் போது அவர், "கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ... இனி நானல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்றார். கிறிஸ்துவின் மரணத்துடனே கூடிய நமது அடையாளப்படுத்தப்படுதல் உள்ளே வாசம் பண்ணும் பாவத்தின் வல்லமையை உடைத்தெறிகிறது. அவருடைய உயிர்த்தெழுதலுடனான நமது அடையாளப்படுத்தப்படுதல் தெய்வீக வாழ்வில் நம்மை நடத்த அருள் அளிக்கப்பட்டதில் நிறைவுகிறது.[4]*

*மனித வர்க்கத்துக்கான தேவனுடைய அன்பு, பாவிகளை தம்மோடே கூட ஒப்புரவாகச் செய்து ஆவிக்குரிய ஜீவியத்தை நமக்கு கொடுக்கிறார். இதைப் பவுல் 2 கொரிந்தியர் 5:17, 18 ல் இப்படியாகக் கூறுகிறார், "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்; ... இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி ..." என்றார்.*

*கொலோசெயர் 2:12, 13, ல் மேற்கொண்டு பவுல் கூறும்போது கொலோசெயர்கள் அக்கிரமங்களினாலே மரித்திருந்த போது அவர்களை உயிர்ப்பித்தார்; அவர்கள் ஞானஸ்நானம் பண்ணப்பட்ட போது தேவன் அவர்களுடைய பாவங்களை மன்னித்தார். பாவம் ஆவிக்குரிய மரணத்தைக் கொண்டு வந்தது, கீழ்ப்படிதலோ பாவமன்னிப்பையும், ஒப்புரவாகுதலையும், ஜீவனையும் கொண்டு வந்தது. தேவனுடைய பெரிதான அன்பு, செயலூக்கத்தைக் கொடுத்து எல்லாவற்றையும் அதன் மூலம் சாத்தியமாக்கிற்று என்றார்.*

*தேவனுடைய இரக்கமும் அன்பும் அவருடைய* **கிருபையால்** *மனிதனுக்கு வந்தது. "கிருபை" என்பது கிரேக்க மொழியில், பெயர்ச்சொல் லாகிய charis, எனப்படும், இதன் பொருள் "சம்பாதிக்க இயலாததும் அளவற்றதுமான தயவு" அது சந்தோஷத்தையும் பாவமன்னிப்பினிமித்தம் நன்றியறிதலையும் கொண்டு வருகிறது.[5] "கிருபை" தெய்வீகம் இரட்சிப்பை மனமுவந்து கொடுக்க முன்வந்ததைக் காட்டுகிறது. இரட்சிப்பு நமக்கு அருளப்படக்காரணம் நாம் நல்லவர்கள் என்பதாலோ அல்லது நற்கிரியை செய்ததாலோ கொடுக்கப்படவில்லை, மாறாக, தேவனுடைய கிருபையால் நமக்குக் கொடுக்கப்பட்டது. இரட்சிப்பு சம்பாதித்துக் கொண்டதாகவோ, அதற்கு தகுதியானவர்கள் என்று நினைத்தோ, அல்*

*லது தகுதிச்சிறப்பாக அளிக்கப்பட்டாலோ, அது கிருபையால் வராது. எல்லை தாண்டிய சிந்தனைக்கப்பால் சென்று விடாமல் ஜனங்கள் இதைப் பற்றிக் கொள்ள அநேகர்களுக்குக் கடினமாயிருக்கிறது. கிருபையால் இரட்சிப்பு என்பது உண்மையானால், நாம் இரட்சிக்கப்பட அதைப் பெற வேண்டியதில்லை, என்று சிலர் சொல்லுவார்கள். மற்றவர்கள் நாம் இரட்சிக்கப்பட போதிய நற்கிரியை செய்ய வேண்டும் என்பார்கள். ஆகிலும் வேதாகமம் இதைக் கூறுவதில்லை. அவர்கள் நம்முடைய நற்கிரியைகள் நமது துர்க்கிரியைகளுக்குமேல் வெற்றி கொள்ளுமானால் நாம் இரட்சிக்கப்படுவோம் என்று அவர்கள் நினைக்கிறார்கள். இந்தக் கோணம் தேவனுடைய கிருபையைப் பற்றிக் கொள்வதுமில்லை. தேவனிடத்தில் சரியான உறவுமுறையைக் பெற்றுக் கொள்ள ஒரே ஒரு பாவம் கூட நம்மை தகுதியற்றவர்களாக்கி விடும் என்று ஏற்றுக் கொள்வதுமில்லை. பின்னதாக, வசனங்கள் 8, 9 ல், தேவனுடைய கிருபையை நாம் எப்படி பயன்படுத்திக் கொள்ளவது என பவுல் விளக்கமளிக்கிறார்.*

***இரட்சிக்கப்பட்டீர்கள்*** *எனும் பதம் கிரேக்க மொழியில் கடந்த கால செயல்பாட்டு வினையில் பெயரெச்சமாகச் சொல்லப்படுகிறது; அதாவது, கடந்த காலத்தில் நடந்த ஒரு செயலின் நிகழ்கால விளைவு மற்றும் எதிர் காலவிளைவை அது சுட்டிக் காட்டுகிறது. இங்கே சொல்லப்பட்டுள்ள செய்யப்பாட்டு வினை இரட்சிப்பு என்பது ஏதோ நாமாக செயல்பட்டு சம்பாதிப்பது அல்ல மாறாக நமக்கு செய்யப்பட்ட ஒன்று என்று காட்டுகிறது. நாம் தேவனைச் சார்ந்திருக்கிறோம். இந்த வசனப் பகுதியில் கடந்த கால, நிகழ்கால, எதிர்கால இரட்சிப்பாக பவுல் பேசுகிறார். அவர், நாம் இரட்சிக்கப்பட்டோம் (கடந்த காலம்), ஆவிக்குரிய ரீதியில் நாம் கிறிஸ்துவுடனே கூட உட்கார்ந்து இருக்கிறோம் (நிகழ்காலம்), வருங்காலங்களில் அவருடைய தயவை நாம் பெறப் போகிறோம் (எதிர் காலம்), ஆகிய இவற்றில் இரட்சிப்பைக் குறித்து பவுல் பேசினார். கடந்த காலத்தில் கிறிஸ்தவன் நீதிமானாக்கப்பட்டிருக்கிறான், நிகழ்காலத்தில் அவன் கிறிஸ்துவின் சாயலில் வளருகிறான், எதிர்காலத்தில் அவன் மகிமைப்படுத்தப்படுவான்.*

## *முன்னோர் வழிவந்த ஒரு நோக்கம் (2:6-10)*

***6 கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகாமேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்வதற்காக, 7 கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி, உன்னதங்களில் அவரோடே கூட உட்காரவும் செய்தார். 8 கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. 9 ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல; 10 ஏனெனில் நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக ஆயத்தம் பண்ணியிருக்கிறார்.***

***வசனம் 6.*** *நமக்கு அளிக்கப்பட்ட இரட்சிப்போடே, தேவன் நமக்கு மகிமையின் ஐசுவரியமுள்ள சுதந்தரத்தையும் ஆயத்தப்படுத்தியிருக்கிறார் (காண்க 1:18).*

*தேவன் "கிறிஸ்துவுடன் கூட கிறிஸ்தவர்களை உயிர்ப்பித்தார்" (2:5)* ***அவரோடே கூட உயிர்த்தெழச்செய்தார்.*** *ரோமர் 6:1-18ல் பவுல் இந்தக் கருத்தை சற்று விளக்கமாகக் குறிப்பிட்டார். (1) கிறிஸ்தவன் பாவத்துக்கு மரித்தான், இது அவன் கிறிஸ்துவுடனே கூட ஞானஸ்நானத்திலே அடக்கம் பண்ணப்பட்டு புதிய ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு எழுப்பப்பட்டும் இருக்கிறான் என்பதை சுட்டிக் காட்டுகிறது. (2) கிறிஸ்தவன் கிறிஸ்துவுடனே கூட மரித்தவனானதால் இனி அவன் பாவத்திற்கு ஊழியம் செய்வதில்லை. (3) கிறிஸ்தவன் தன்னைப் பாவத்திற்கு மரித்தவனென்றும் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவன் என்றும் தனக்குத் தானே பரிசீலித்துக் கொள்கிறான். (4) கிறிஸ்தவன் தன்னை ஆவிக்குரிய முறையில் மரணத்திலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டவனாய் தேவனுக்கு ஒப்புக் கொடுக்கிறான். (5) கிறிஸ்தவன் பாவம் தன்னில் கொண்டுவந்த மரணத்தி னின்று விடுதலையாகி பிழைத்திருக்கத்தக்கதாக நீதிக்கு அடிமையாக தன்னை ஒப்புவித்திருக்கிறான், ஏனெனில் அவன் தனக்கு ஒப்புவிக்கப்பட்ட "உபதேச சட்டத்திற்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிகிறான்" (ரோமர் 6:17) என்று அவர் கூறினார்.*

*ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேசம் பவுல் தான் சென்ற இடமெல்லாம் பிரசங்கித்த அதே சத்தியம் தான்: "... கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்" (1 கொரிந்தியர் 15:3, 4). இந்த உபதேசம் ஒரு சட்டமாக, அல்லது முன்மாதிரியான உதாரணமாக, அவர்கள் அதற்குள் ஊற்றப்பட்டார்கள். கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தது போலவே, ரோமர்கள் தங்களுடைய பாவங்களுக்காக மரித்தார்கள். கிறிஸ்து அடக்கம் பண்ணப்பட்டது போலவே, ரோமர்கள் கிறிஸ்துவுடனே கூட ஞானஸ்நானத்திலே அடக்கம் பண்ணப்பட்டார்கள். கிறிஸ்து உயிர்த்தெழுச் செய்யப்பட்டது போல, ரோமர்கள் புதிய ஜீவனுள்ளவர்களாய் உயிர்த்தெழுச் செய்யப்பட்டார்கள் (ரோமர் 6:1-6). இந்த காரியம் பேச்சு நடையில் சொன்னால், அவர்கள் கிறிஸ்துவுடனே கூட எழுப்பப்பட்டிருக்கிறார்கள்.*

*கொலோசெயர் 2:12 மற்றும் 3:1ல், பவுல் கொலோசெயர்கள் "ஞானஸ்நானத்திலே அவரோடுகூட அடக்கம்பண்ணப்பட்டு" "தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும்" இருந்தார்கள், என்று சொன்னதிலிருந்து அதே கருத்தில்தான் உரைத்தார். ஞானஸ்நானத்தின்போது, அவர்கள் தங்களுடைய விசுவாசத்தை விளங்கப்பண்ணி "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்," என்று தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தின்படி கிரியை செய்வார் என்று விசுவாசித்தார்கள் (மாற்கு 16:16). கிறிஸ்துவுடனே கூட எழுப்பப்பட்ட கொலோசெயர்களை "கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்" என்று அறிவுறுத்தினார் (கொலோசெயர் 3:1).*

*இந்தக் கிறிஸ்தவர்களைக் குறித்த உண்மைகள் எதுவோ அதேபோல, ஞானஸ்நானம்தான் எபேசியர்களை* ***கிறிஸ்துவுக்குள்ளாக்கியது.*** *அவர்கள் உயிர்ப்பிக்கப்பட்டு ஆவிக்குரிய ரீதியில்* ***அவரோடே கூட உன்னதங்களிலே***

**உட்காரச் செய்தார்** (காண்க 1:3). "உன்னதங்களில்" எனும் குறிப்பு, அவர்கள் ஏற்கனவே கிறிஸ்துவுக்குள் இருக்கிறபடியாலும் அவர்களுடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட்டிருப்பதாலும், இன்னும் அவர்கள் செய்ய வேண்டிய பணிகளும் இன்னும் அவர்கள் பண்ணவேண்டிய யுத்தங்களும் எஞ்சியிருப்பதை நினைப்பூட்டும் வார்த்தையாகும். சபை இன்னமும் இந்த உன்னதங்களில், அல்லது ஆவிக்குரிய, ரீதியில் சுவிசேஷத்தை அறியப்பண்ணவேண்டியதாயிருக்கிறது (3:10) - தீமைக்கு எதிரான ஆவிக்குரிய போராட்டம் உன்னதங்களில் இடம் பெறுகிறது (6:10-12).

**வசனம்** 7. பவுலின் கூற்றுப்படி, தேவன் தமது பரிசுத்தவான்களை இரட்சித்து எழுப்பியிருக்கிற படியால் **தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை கிறிஸ்து இயேசுவுக்குள் விளங்கப் பண்ணினார்** (2:6). நிச்சயமாக இரட்சிப்பு என்பது மனிதனுடைய நன்மைக்கே என்றாலும், தேவனுடைய புகழ்ச்சிக்காகவும் தான் (1:5, 11, 14). கூடுதலாக மனிதனுடைய, இரட்சிப்பு தேவன் தம்முடைய கிருபை எவ்வளவாய் ஐசுவரியமுள்ளது என்று தமது தயவுள்ள சித்தத்தைக் "காட்டும்படி" அனுமதிக்கிறது என்று பவுல் கூறினார். "வருங்காலங்களில்" என்பது கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, மரித்தோரின் உயிர்த்தெழுதல், நியாயத்தீர்ப்பு ஆகியவைகளின் நிகழ்வுகளுக்கு அப்பால் வரும் கால நேரத்தைக் குறித்துப் பேசுகிறது. காலத்தின் முடிவில், தேவன் சகல ஜனங்களையும் தமக்கு முன்பாகக் கூட்டிச் சேர்க்கும்போது - தமது தூதர்களின் சேனைகளுக்குக் முன்பாகக் கூட்டிச் சேர்க்கும் போது - கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே , தம்முடைய கிருபையின் மகாமேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்வார்.

பவுல் தேவனுடைய கிருபை மட்டும் குறித்துப் பேசவில்லை, "கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தைக்" குறித்தும் பேசினார். நிகழ்கால பெயரெச்சமாகப் பேசப்படும் "மகா மேன்மையான ஐசுவரியம்" (*huperballō*), எனும் பதம் தேவனுடைய கிருபையைக் குறித்து 2 கொரிந்தியர் 9:14 லும் பயன் படுத்தப்பட்டுள்ளது. எபேசியரில் வேறு இடங்களில். அவருடைய வல்லமையையும் கிறிஸ்துவின் அன்பையும் குறிக்கத்தக்க அதே பதங்களைப் பயன்படுத்தி விவரித்தார் (1:19; 3:19).

> 1:19-21 மற்றும் 2:4-7 ஆகிய வசனங்களுக்கு இடையே காணப்படும் ஒற்றுமையின் வெளிச்சத்தில் இந்த கடைசி வசனப் குறிப்பு தொடர்பு உடையதாயிருக்கிறது ... , கிறிஸ்துமரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் பரலோக உன்னதங்களில் வீற்றிருக்கும்படியாக செய்தது தேவனுடைய மகாமேன்மையான வல்லமையை விளங்கப் பண்ணுவதாயிருந்தால், விசுவாசிகளின் உயிர்த்தெழுதலும் ஆவிக்குரிய மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்த உன்னதங்களில் கிறிஸ்துவுடனே கூட உட்காருவதும் தேவனுடைய மகாகிருபையை விளங்கப்பண்ணுவதாயிருக்கிறது.[6]

2:4-7ல் குறைந்த பட்சம் மூன்று முடிவுரைகளைக் காணலாம். (1) கிறிஸ்து உயிர்த்தெழச் செய்யப்பட்டு தேவனுடைய வலது பாரிசத்தில் உட்காரச் செய்யப்பட்டது போல, சுவிசேஷத்துக்கு கீழ்ப்படிந்ததன் மூலம், கிறிஸ்தவன்

எழுப்பப்பட்டு கிறிஸ்துவுடன் ஆவிக்குரிய ரீதியில் உட்கார வைக்கப்பட்டான். (2) கிறிஸ்துவின் மகிமையும் அவருடனான கிறிஸ்தவனின் உறவுமுறையும் எதிர்கால பயன்பாட்டைக் குறிக்கிறது. (3) விசுவாசிகளுக்காக தேவன் எவைகளை வைத்துள்ளாரோ அவைகள் வருங்காலங்களின் தோற்றம் வரைக்கும் வெளிப்படுத்தப்பட மாட்டாது, அப்பொழுது கிறிஸ்து வெளிப்படுவார் நாமும் மகிமையிலே அவரோடு கூட வெளிப்படுவோம் (காண்க கொலோசெயர் 3:4).

பாவிகளிடம் தேவன் கொண்டுள்ள "இரக்கம்," "அன்பு," மற்றும் "கிருபை" ஆகிய தயவுள்ள குணாதிசயங்களை விளக்கப்படுத்த பவுல் ஏற்கனவே அவைகளைப் பயன்படுத்தினார் (2:4-7). இந்தப் பதங்களில் ஒன்றாக வசனம் 6 ல் தயவு எனும் (*chrēstotēs*), வார்த்தையைக் கூட்டினார். அது தேவன் தமது ஜனங்களுக்காக காட்டும் தர்ம சிந்தையையும் நன்மையான செயல்பாடுகளையும் குறிப்பிட்டுக் காட்டுகிறது, இதில் மனிதன் எவ்வளவு நன்றியறிதல் இல்லாமற் போனாலும், அதை அவர் செயல்படுத்தினார்.[7]

**வசனம் 8.** (கிருபையி) **னாலே** என்பது *gar* எனும் வார்த்தையின் மொழிபெயர்ப்பு, அது தேவனுடைய மகா மேன்மையான கிருபையின் ஐசுவரியத்தைக் குறிப்பிட்டு காட்டும்படி எழுதப்பட்ட வார்த்தை. எபேசியர்கள் கிருபையினால் இரட்சிக்கப்பட்டார்கள் என்று சற்று முன்பு எழுதினார் (2:5), இது தேவனுடைய கிருபையை அறிமுகப்படுத்தி மனிதனுடன் உள்ள தொடர்பை அவர் வலியுறுத்துவதாயிருந்தது.

ஒருவர் **கிருபையினால் இரட்சிக்கப்படுகிறார்** என்பதை அப்போஸ்தலன் உறுதிப்படுத்திய விதம் அந்தக் கிருபையை ஒருவர் பெற வேண்டியதில்லை என்று அவர் யோசனையாகச் சொன்னதாகாது. இரட்சிப்பு என்பது சம்பந்தப்பட்ட எல்லா காரியங்களாலும் தேவனுடைய கிருபையை மையம் வைத்தே வருகிறது, ஆனால் புதிய ஏற்பாட்டில் எங்குமே ஒரு நபர் <u>எந்த ஒரு தனிப்பட்ட</u> காரியத்தாலும் இரட்சிக்கப்படுவதாகச் சொல்லப்படவில்லை. மனித வர்க்கத்துக்கு தேவன் கொண்டு வர விரும்புகிற இரட்சிப்பிற்கான சகலக்காரியங்களின் சாராம்ஸமே கிருபை. தேவனுடைய இந்தக் கிருபை, "எல்லா மனுஷருக்கும் ... பிரசன்னமாகியது" (தீத்து 2:11). அப்படியானால், ஏன் எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவில்லை? இதற்கான எளிய பதில் எல்லாரும் தேவனுடைய கிருபையை சரியான வழியில் பெற்றுக் கொள்வதில்லை, அதாவது **விசுவாசத்தின் மூலம்** பெறுவதில்லை. 2 கொரிந்தியர் 6:1ல், ஒருவர் "தேவனுடைய கிருபையை விருதாவாகப் பெறக் கூடும்" என பவுல் எச்சரித்தார்.

"கிருபை" மனிதனுடைய இரட்சிப்பில் தேவனுடைய பகுதியின் சாராம்ஸமாக இருக்கிறது, "விசுவாசம்" தேவனிடத்தில் மனிதனுக்குள்ள கடமையின் சாராம்ஸமாயிருக்கிறது. புதிய ஏற்பாடு அடிக்கடி "விசுவாசம்" வைத்தலைக் குறித்த கருத்தை படம் பிடித்துக் காட்டுகிறது. அல்லது ஒருவர் தன்னுடைய முழு கடமையையும் பொதுவாக நிறைவேற்றவோ அல்லது பற்றிக் கொள்ளவோ செய்கிற விசுவாச வழியாகக் காட்டுகிறது (காண்க யோவான் 3:16; ரோமர் 1:16; 5:1). கூடுதலாக, "விசுவாசம்" மற்றும் "விசுவாச உறுதி" ஆகியவை புதிய ஏற்பாட்டில் குறிப்புச் சொல்லாக சொல்லப்பட்டுள்ளது, அது தேவனுக்கு ஆற்ற வேண்டிய அநேகக் கடமைகளில்

ஒன்றாகக் கூறப்படுகிறது (காண்க மாற்கு 16:16; நடபடிகள் 18:8). நடபடிகள் 16:25-34 ல், லூக்கா பிலிப்பிய சிறைக்காவலனின் மனமாற்ற நிகழ்ச்சியை பதிவு செய்திருக்கிறார். சிறைக்காவலன் பவுலிடம், "நான் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்ட பொழுது, அவர், "கர்த்தராகிய இயேசுவை விசுவாசி" என்று சொன்னார் (வசனங்கள் 30, 31). பிறகு பவுல் அவனுக்கு "கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்." அப்பொழுது அவனும் அவனுடைய வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள் (வசனங்கள் 32, 33). சிறைக்காவலன் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்ட பின், "தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி," மனமகிழ்ச்சியுள்ளவனாயிருந்தான் (வசனம் 34). இந்த வசனப்பகுதியில் விசுவாசம் கீழ்ப்படிதலை உள்ளடக்கியிருந்ததை விளக்கப்படுத்துகிறது.

பிரசித்தமாய்ச் சொல்லப்படும் கருத்து என்னவெனில் கிறிஸ்துவில் வைக்கிற "விசுவாசம்" "விசுவாசத்தால் மட்டுமே" எனும் கடமையாகச் சொல்லப்படுகிறது, ஆனால் புதிய ஏற்பாடு ஒரு போதும் அப்படிச் சொல் லுவதில்லை. உண்மை என்னவெனில், "விசுவாசத்தினாலே மாத்திரம்" என்று சொல்லப்படுகிற ஒரே இடம் புதிய ஏற்பாட்டில், "அல்ல" என்று முடிகிறது (யாக்கோபு 2:24).

கிரேக்க மொழி வார்த்தைகள் "விசுவாசம்," "நம்பிக்கை" "விசுவாசி" ஆகியவை ஒரே வேர் வார்த்தையின் அடிப்படையில் வருபவை. இதன் வினைச்சொல் *pisteuō* அது பின்வருமாறு விளக்கப்படுத்தப்படலாம் *"முற்றிலும் மனதில் ஏற்று பதிலளிப்பது" அல்லது "முற்றிலும் உறுதியாக்கப்பட்டு தடுமாற்றமில்லாமல் நிச்சயமாக நம்புவது."*[8] விசுவாசத்தைக் குறித்த கருத்து "மனங்குத்தப்படுதல் ... அசைக்க முடியாத நம்பிக்கை ... கீழ்ப்படிதல்" ஆகியவற்றை உள்ளடக்கியது.[9] வேதம் கூறும் விசுவாசம் அதன் இயல்பில் ஒரு பரந்த தன்மையுடையது. பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும். தேவனால் அங்கீகரிக்கப்பட்ட விசுவாசம், மனதில் நெகிழ்ச்சி ஏற்படுத்தும் மூன்று மூலக்கூறுகளை, உறுதியான நம்பிக்கையை, மற்றும் கீழ்ப்படிதலைக் கொண்டவை.

கீழ்ப்படிகிற விசுவாசம் தேவையான பட்சத்தில்கூட, நம்மை நாம் இரட்சித்துக் கொள்ள இயலாது. அடுத்ததாக பவுல் சொன்னார், **"இது உங்களால் உண்டானது அல்ல, இது தேவனுடைய ஈவு என்று சொன்னார்."** "இது," *touto,* என்பதன் மொழிபெயர்ப்பு, இரட்சிப்பின் முழுமை முறையான செயலுக்கு குறிப்பிடப்படுவது. தேவனுடைய கிருபை இரட்சிப்பை சாத்தியமாக்கிற்று, மனிதனுடைய விசுவாசமே இரட்சிப்பை ஏற்றுக் கொள்ளச் செய்கிறது. எனவே இரட்சிப்பு என்பது மனிதனுடைய சாதனையல்ல, ஆனால் மனிதனுக்கு அது ஒரு "ஈவாக" வருகிறது. இரட்சிப்பு "தேவனுடைய" ஈவாக இருப்பதால், இரட்சிப்பின் நடைமுறையில் மனிதன் அளிக்க வேண்டிய பங்களிப்பு *எதுவுமில்லை* என்று கூறுவோர் கவனிக்க வேண்டும். எந்த ஒரு ஈவும் (வெகுமதியும்) ஏற்றுக் கொள்ளப்படாதவரை அதன் நன்மைகளை அனுபவிக்க இயலாது. தேவனுடைய ஈவாகிய இரட்சிப்பு கிருபையால் கொடுக்கப்படுகிறது, ஆனால் அது விசுவாசத்தால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். மனுஷீகத்தில் உள்ள ஒரு தகப்பன் தன் பிள்ளைக்கு தன்னுடைய சுதந்தரத்திலிருந்து (ஆஸ்தியிலிருந்து) கொடுப்பதை, அந்தப் பிள்ளை அதன்

நன்மையை அடைய அதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

**வசனம் 9.** இந்த வாக்கியம் மேலும் இந்த இரட்சிப்பு கிருபையின் ஈவு, மனிதனுடைய உழைப்பின் **விளைவு அல்ல.** என்பதை வலியுறுத்துகிறது. விசுவாசித்தல், நம்பிக்கை வைத்தல், கீழ்ப்படிகின்ற விசுவாசம் ஆகியன மனிதப் பிரயாசம் தானே, இரட்சிப்புக்கு இவை அவசியமில்லை, என்கின்றனர். அதற்கு மாறாக, விசுவாசம் தன்னில் **கிரியை** உள்ளதாக இருக்கிறது. பவுல், "கிரியைகளினால் ... அல்ல" என்று சொன்ன போது, அவனுக்கு தகுதியளிக்கும் கிரியைகளைக் குறித்துப் பவுல் பேசுவதில்லை, மேலும் யார் ஒருவரும் இரட்சிப்பை தகுதியாக சம்பாதிப்பதில்லை. ஒருவர் இரட்சிப்பை சம்பாதிக்கக் கூடுமானால், அவர் தேவனுக்கு முன்பாக **பெருமை பாராட்டி** தனது சாதனையாகவும் தனக்கு கொடுக்கப்பட வேண்டிய ஒன்று என்பது போலவும் பேசுவார். இருப்பினும் பவுல் ஒருவரும் பெருமை பாராட்டக் கூடாது என்றார். கிரியைகளுக்கு தகுந்த கூலியாக கொடுக்கப்படுமாகில் ஒருபோதும் இரட்சிப்பை அடையமுடியாது, ஆனால் விசுவாசக் கிரியை எப்போதும் அவசியமான ஒன்று. இதைத் தான் யாக்கோபு தன் மனதில் கொண்டு, "கிரியைகளில்லாத விசுவாசம், செத்ததாயிருக்கிறது," என்று சொன்னார் (யாக்கோபு 2:17). தொடர்ந்து அவர் யாராலும் சந்திக்க இயலாத ஒரு சவாலை முன் வைத்து, "கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி" என்று சொன்னார் (யாக்கோபு 2:18). ஒருவர் விசுவாசத்தைப் பற்றி பேசலாம், ஆகிலும் அவர் விசுவாசத்தை கவனித்துப்பார்க்கத் தக்க - கிரியைகளினாலே மட்டுமே காட்டலாம். தேவனுடைய கிருபையினாலே கொடுக்கப்படுகிற இரட்சிப்பை சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிந்து ஒருவன் பெறும்போது, அவன் சம்பாதித்தது ஒன்றுமில்லை, எனவே பெருமை பாராட்ட காரணம் எதுவுமில்லை. கிறிஸ்துவின் சிலுவையிலே விளங்கப் பண்ணப்பட்ட அவருடைய கிருபையைக் குறித்து களிகூர மட்டுமே காரணம் உண்டாயிருக்கிறது.

தேவனுடைய "விசுவாசத்திற்கான கனப்படுத்தும் பட்டியலில்" எபிரெயர் 11ல் இந்தக் கருத்து நன்கு விவரிக்கப்படுகிறது. பழைய ஏற்பாட்டு பாத்திரங்களெல்லாம் (நபர்களெல்லாம்) தங்களுடைய கீழ்ப்படிதலினால் விசுவாசத்தை விளங்கப் பண்ணினார்கள். ஆபேல் பலி செலுத்தி, ஏனோக்கு தேவனுக்குப் பிரியமாய் சஞ்சரித்து, நோவா பேழையைக் கட்டி, ஆபிரகாம் கீழ்ப்படிந்து பலியிட்டு, மோசே சரியான தெரிவை செய்து விசுவாசத்தை விளங்கப் பண்ணினார்கள். தேவன் தமது கிருபையால் அளிக்கும் காரியங்களை ஏற்றுக் கொள்வது இந்த விசுவாசம்தான் - மனங்குத்தப்படுதலையும், உறுதியான நம்பிக்கையையும், கீழ்ப்படிதலையும் உட்படுத்தின ஒரு விசுவாசம்.

**வசனம் 10.** வசனம் 8ல் கூறப்பட்டது போல, (கிருபை) **யினாலே** என்று பவுல் பயன்படுத்திய வார்த்தையிலிருந்து சம்பந்தப்பட்ட தனது கருத்துக்களைப் பொழிந்திருப்பது மேலே கூறப்பட்டவைகளே. மனிதன் தன்னுடைய கிரியைக்களுக்கான சிறப்புதகுதியாக ஒருபோதும் இரட்சிப்பை சம்பாதித்துக்கொள்ள இயலாது என்றிருக்கையில், பவுல் கிறிஸ்தவர்களுக்கு நினைவூட்டி, **"கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்"** என்று சொன்னார். இந்த வாக்கியத்தில் மேற்கொண்டு காட்டப்படும் குறிப்பு என்னவெனில் இரட்சிப்பு தேவனால் கொடுக்கப்படும் ஈவு, எனவே ஒருவரும் பெருமை பாராட்டும் அளவுக்கு

இட்டுச் செல்லும் ஊதியமாக சம்பாதிக்கக் கூடியதல்ல. இரட்சிக்கப்பட்டவர்கள் "கிறிஸ்து இயேசுவுக்குள் நற்கிரியைகளுக்கென்று சிருஷ்டிக்கப்பட்டவர்கள்," ஆதலால் இப்படிப்பட்ட கிரியைகள் இரட்சிப்படைய ஏதுவான காரணியல்ல. மாறாக, அவர்களுடைய இரட்சிப்பு அவர்கள் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்துவுக்குள்ளானபோது கொடுக்கப்பட்ட ஒன்று.

ஆதியிலே தேவன் உலகத்தை சிருஷ்டித்தார், மற்றும் உலகம் அவருடைய கையின் கிரியை. இப்பொழுது "கிறிஸ்துவுக்குள்" தேவன் நம்மை சிருஷ்டித்திருக்கிறார், நாம் அவருடைய கையின் கிரியைகளாயிருக்கிறோம், கிறிஸ்துவுக்குள்ளான இந்தக் கிரியை விவரிக்கப்படக் கூடியது: தேவன் பாவிகளை இரட்சிப்பதன் மூலம் அவர்களின் பாவங்களிலிருந்து மீட்டு புதிதாக்கியிருக்கிறார். 2 கொரிந்தியர் 5:17ல் பவுல், "ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால், அவன் புது சிருஷ்டியாயிருக்கிறான்," அல்லது "புது படைப்பாக இருக்கிறான்" என்றார். பின்னதாக அதிகாரம் 2ல் பவுல் தேவனுடைய இதே செய்கையை கிறிஸ்துவுக்குள்ளான யூதர்களுக்கும் புறஜாதிகளுக்கும் சம்பந்தப்படுத்தி, "இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாக சிருஷ்டித்து" (அல்லது ஒன்றாக்கி) (2:15) என்று குறிப்பிடுகிறார், அதே கிரேக்க வார்த்தை (*ktizō*) தான் 4:24ல் பாவிகளின் இரட்சிப்பைக் குறிக்க பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவன் மனிதனுக்கு அளிக்கும் ஈவு இரட்சிப்பு. இந்த வசனப் பகுதியில் சொல்லப்படும் இரட்சிப்பு கிறிஸ்துவுக்குள் தேவனுடைய சிருஷ்டிப்பின் செயல், மற்றும் நமது இரட்சிப்பின் நோக்கம் நாம் நற்கிரியை செய்யும்படி செயல்பட்டது.

கிறிஸ்து இப்பிரபஞ்ச சிருஷ்டிப்பை தேவன் செயல்படுத்துவதில் முகவராயிருந்தார் (யோவான் 1:1-3; எபிரெயர் 1:2; கொலோசெயர் 1:16), எனவே அவரே தான் கிறிஸ்துவுக்குள் இருக்கிற புதிய மனுஷனாகிய தேவனுடைய சிருஷ்டிக்கும் முகவராயிருக்கிறார். இந்தப் புதிய மனுஷன் "நற்கிரியை செய்யும்படிக்கு" சிருஷ்டிக்கப்பட்டவன். கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களின் வாழ்வின் குணாதிசயம் அவர்களின் நற்கிரியைகளினாலே அறியப்படுகிறது. நற்கிரியை என்பது, உண்மையில், புதிய சிருஷ்டியின் நோக்கம், விளைவு, அல்லது இலக்கைக் குறிப்பிடுவது. ஆகையால், சிறப்பு ஊதியமாக (வெகுமதியாக) அளிக்கப்படத்தக்க நற்கிரியைகள் பாவிகளை இரட்சிப்பதில்லை என்பதால், கிருபையினால் இரட்சிக்கப்பட்டவர்களின் நடத்தை அன்புடன் கூடிய விசுவாசத்தின் அடிப்படையில் செய்யும் நற்கிரியைகள் மூலம் விளங்கப்பண்ணப்படுகிறது (கலாத்தியர் 5:6). விசுவாசம் முதற்கட்டமாக தேவனுக்குச் செவி கொடுப்பது போலவே கீழ்ப்படிதலிலும் விளங்கப் பண்ணப்படுகிறது (காண்க யாக்கோபு 2:17), எனவே கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களின் விசுவாசம் செயலாற்றப்படும் நற்கிரியையினால் அதிகாரப்பூர்வமாக தோற்றமளிக்கிறது. இதே கருத்துதான் தீத்து 3:5, 8 லும் சுட்டிக் காட்டப்பட்டது. அங்கே, தேவன் தமது இரக்கத்தினால் விசுவாசிகளை இரட்சித்தாரேயன்றி மனிதனுடைய கிரியைகளினாலே அல்ல, ஆகிலும் இரட்சிக்கப்பட்டவர்கள் தங்கள் நற்கிரியைகளைத் தொடரும்படி ஜாக்கிரதையாயிருக்க வேண்டும் என்று பவுல் அறிவித்தார்.

பவுல் "நற்கிரியைகளைப்பற்றி" **நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்** என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

*உலகம் உண்டாவதற்கு முன்பே கிறிஸ்துவுக்குள் இருக்கும் விசுவாசிகளை தேவன் காண முடிந்தது (1:4). அதே போல, கிறிஸ்துவுக்குள்ளே வாழும் அவருடைய ஜனங்களின் புதிய ஜீவனையும், நல்நடத்தை மற்றும் ஒழுக்கத்தையும் அவர் கவனிக்க முடிந்தது.*

*தேவன் "நற்கிரியைகளைத்" தமது இரட்சிப்பின் நோக்கத்தில் ஒன்றாகக் கண்டார்; இரட்சிக்கப்பட்டவர்களாகிய நம்முடைய நோக்கங்களிலும் ஒன்றாக நாமும் "அவைகளில் நடக்க வேண்டும்." நற்கிரியைகளைக் செய்யத்தகுந்த நமது திராணி தேவனால் தமது நித்திய திட்டத்தில் ஒன்றாக வைக்கப்பட்டது, மற்றும் அவருடைய திட்டத்தின் நிறைவேற்றமாக இரட்சிக்கப்பட்டவர்களில் வாழ்க்கை நிலையில் ஏற்பட்ட மாற்றத்தில் காணப்படுகிறது. தேவனுடைய நோக்கத்தை நமது வாழ்க்கையில் நிறைவேற்றுவதில் நற்கிரியை செய்யும்படி எடுக்கும் தீர்மானத்தில் ஒன்றாக அது இருக்க வேண்டும்.*

## *பயன்பாடு*

***சிலுவைக்கு மேல் - இரக்கமுள்ள தேவன் (2:4-12)***

*"தேவனே" எனும் வார்த்தை உலகத்தில் சகல வித்தியாசத்தையும் ஏற்படுத்துகிறது. வசனம் 4 "தேவன் அவர்கள் எல்லாரையும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்" என்றோ அல்லது "தேவன் அவர்களில் ஒவ்வொருவரையும் அழித்தார்" என்றோ நாம் எதிர்பார்த்திருக்கக் கூடும். மாறாக, தேவனுடைய இரக்க சுபாவத்தை பவுல் பேசினார்.*

*"இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவர்." தேவன் இரக்கமுள்ளவர் மட்டுமல்ல. அவர் இரக்கத்தில் ஐசுவரியம் உள்ளவராகவும் இருக்கிறார். அவர் இரக்கத்தில் செல்வந்தராக இருக்கிறார். இரக்கம் (தண்டிக்கப்பட) தகுதியுள்ள காரியத்தை நிறுத்திவைக்கிறது. பாவிகள் அழிக்கப்படத் தகுதியானவர்கள், ஆனால் தேவனுடைய இரக்கம் அந்த அழிவை நிறுத்தி வைக்க விரும்புகிறது.*

*"அவருடைய பெரிதான அன்பு." இதினால்தான் தேவன் இரக்கத்தை பாவிகளுக்கு காண்பிக்க விரும்பினார். அவர் எல்லா பாவிகளையும் பெரிதான ஒரு அன்பினாலே நேசிக்கிறார்.*

*"கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்." தேவனுடைய கிருபை என்பது அவருடைய "தகுதியற்றவர்களுக்கு, தகுதி ஊதியம் பெறக் கூடாதவர்களுக்கு, சம்பாதிக்காதவர்களுக்கு அளிக்கும் தயவு." கிருபை பாவிகள் ஒருபோதும் தகுதி பெறாதவைகளை அவர்களுக்குக் கொடுக்க விரும்புகிறது. இந்த உண்மைகளைக் கவனியுங்கள்: நீதி ஒருவன் எதற்குத் தகுதியானவனோ அவனுக்கு அதைக் கொடுக்கிறது, தேவன், நீதியுள்ளவராக இருக்கிறபடியால் பாவிகள் இழந்து போக அனுமதிக்கிறார்; இரக்கம் ஒருவன் எதற்குத் தகுதியானவனோ அதை நிறுத்திவைக்கிறது, மற்றும் தேவன் இரக்கமுள்ளவராயிருக்கிறார்; மற்றும் கிருபை ஒருவன் ஒருபோதும் தகுதிபெறாதவனாயிருந்தும் அவனுக்கு (நன்மை) கொடுக்கிறது. ஒவ்வொருவரும் பாவத்தில் தொடர்ந்து நிலைத்திருந்து தேவனுடைய சுத்தமான நீதியை - மரணத்தைப் பெறப்போகிறார்களா - அல்லது தேவனுடைய அன்பு, இரக்கம், மற்றும் கிருபை ஆகியவற்றை கிறிஸ்துவுக்குள் ஏற்றுக் கொள்ளப்போகிறார்களா என்று தெரிவு செய்தல் வேண்டும். ஒரு பாவி விசுவாசத்தைக் கொண்டு கிருபையினால் இரட்சிக்கப்படும்வரை, அவன்*

*கிறிஸ்துவை விட்டுப் பிரிந்திருக்கிறவனும் தேவனற்றவனுமாயிருக்கிறான் (2:12).*

ஜெய் லோக்ஹார்ட்

***அவருடைய கிருபையின் வெற்றிச் சின்னங்கள் (2:1-10)***

*விளையாட்டு வீரர்கள் அடிக்கடி வெற்றிப் பதக்கங்கள், வெகுமதி நாடாக்கள், அல்லது பாராட்டுப் பதக்கம் ஆகியவை பரிசளிக்கப்படுகிறார்கள். இந்த பரிசுகளெல்லாம் நன்கு ஏற்கப் பட்ட சாதனைகள் என்பதையும் பெறுகிற தனி நபர்களுக்கு கனத்தையும் கொண்டுவருபவை. இந்த நெடுங்கால பாரம்பரியம் புராதன ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிக்கு நம்மை கொண்டு செல்லுகிறது, இது பவுலின் வாசகர்களுக்கு நன்கு பரிச்சயம் ஆனது (காண்க 1 கொரிந்தியர் 9:24; 2 தீமோத்தேயு 2:5). தேவனும் தமது வெற்றிச் சின்னங்களை நமக்கு வைத்திருக்கிறார் என்பது ஆச்சரியமானதாகக் காணப்படக்கூடும். அவைகளை நாம் எபேசியர் 2:1-10 ல் தெரிந்து கொள்கிறோம்.*

*நம்முடைய கடந்தகாலம். தேவன் நமக்கு செய்தவைகளான தெரிவு, மீட்பு, மற்றும் சுதந்தரம் பற்றி பவுல் சொல்லிக் கொண்டிருந்தார். எப்படியிருப்பினும், இஸ்ரவேலின் தேவனுக்கு முன்பாக நமது நிலைமையை நாம் புரிந்து கொண்டாலன்றி, தேவன் நமக்கு செய்திருப்பதை நாம் புகழ மாட்டோம். இந்த "கெட்ட செய்திதான்" நம்மை கிறிஸ்துவுக்குள் "நற்செய்திக்கு" ஆயத்தப்படுத்துகிறது. பவுல் நமது கடந்த காலத்தைக் குறித்து பேசி, நம்மிலே ஒவ்வொருவரிலும் இருந்த நான்கு குணாதியங்களை முன் வைக்கிறார்.*

*1. நாம் மரித்தவர்களாயிருந்தோம் (2:1). இங்கே அவர் நம்முடைய மாம்ச சரீரம் மரித்திருந்ததை பேசவில்லை, மாறாக நமது ஆவிக்குரியவைகளைப் பேசுகிறார் என்பது தெளிவு. உள்ளான மனுஷன் மரித்திருந்தான். ஏதேன் தோட்டத்தில் ஆதாம் விலக்கப்பட்டக் கனியை புசித்த போது, அவனுடைய ஆவி தேவனுடைய ஆவியோடு கொண்டிருந்த நெருங்கின உறவை இழந்து விட்டது. அவனைப் போலவே பாவத்தினிமித்தம், நாம் எல்லாருமே ஆவிக்குரிய மரணத்தை அடைந்தோம்.*

*மரித்த ஒருவனுக்கு மற்ற எல்லாவற்றையும் விட வேறு என்ன தேவைப்படுகிறது? அவன் பிழைத்து எழ வேண்டும்! உயிரோடிருந்து என்னை "விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமல் இருப்பான்" என்று கிறிஸ்து சொன்னார் (யோவான் 11:26). இந்த மரணம் உண்மையில் ஒருவனுடைய சரீரத்திலிருந்து அவருடைய ஆவி பிரிவதைக் குறிப்பிடுவதில்லை, மாறாக தேவனிடத்திலிருந்து ஒருவருடைய ஆவி பிரிந்திருப்பதையே குறிப்பிடுகிறது. நித்திய ஜீவன் என்பது என்றென்றும் வாழுகிற வாழ்வு மட்டுமல்ல. நரகத்தில் இருக்கும் ஆத்துமாக்கள் நித்தியத்துக்கும் உயிரோடிருக்கும். யோவான் 17:3 சொல்லுகிறது, "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்."*

*உண்மையான ஜீவன் கிறிஸ்துவை அறிவதிலிருந்தும் அவருடன் கொண்டுள்ள உண்மையான உறவு முறையிலிருந்தும் வருகிறது; நமது பட்டணம் முழுவதும் மரித்த மக்களால் நிறைக்கப்பட்டுள்ளது; அவர்கள் கிறிஸ்துவுடன் உறவுமுறை வைக்காததால் மரித்தவர்களாயிருக்கிறார்கள்,*

*உண்மையான ஊற்றுக்காரணர் அவரே.*

*2. நாம் ஆதிக்கஞ் செலுத்தப்பட்டோம் (2:2). ஆகாயமண்டலத்து பிரபு யார்? அது, சாத்தான்தான். பூமியிலே மரித்தவர்களாய்த் திரிகிற ஆண் பெண் இருபாலருக்கும் அவனே சர்வாதிகாரி.*

*தெருவிலிருக்கும் ஒரு சராசரி நபர் "நான் ஆதிக்கம் செலுத்தப்பட வில்லை. நான் விரும்புகிறபடி எதையும் செய்ய சுதந்தரம் பெற்றிருக்கிறேன்," என்று தர்க்கிக்கலாம். அவர் தான் விரும்புகிற எதையும் செய்ய சுதந்தரம் உடையவர்தான்; பிரச்சனை என்னவெனில் சரியானதைச் செய்ய அவர் விரும்புவதில்லை.*

*சாத்தான் மனிதரின் இருதயங்களை தன் அதிகாரத்திற்குள் கொண்டுவந்து, அவர்கள் சுதந்திரராய் இருக்கிறார்கள் என்று நினைக்கும்படி அவர்களை வஞ்சிக்கிறான். ஆனால் உண்மையில் அவர்கள் பாவத்திற்கு அடிமை களாயிருக்கிறார்கள்.*

*3. நாம் கீழ்ப்படியாதவர்களாயிருந்தோம் (2:2). கீழ்ப்படிதலில்லாத சுபாவம்தான் (ஏதேன்) தோட்டத்தில் பிரச்சனையின் துவக்கமாக இருந்தது, ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தேவன் கொடுத்த தெரிவு செய்யும் உரிமையில் தேவனுக்கு விரோதமாய் செய்வதையே தெரிவு செய்து கொண்டனர். அதிலிருந்து வந்த ஜனங்கள் முரட்டாம் பண்ணும் கீழ்ப்படியாமையின் பிள்ளைகளாகவே இருக்கின்றனர்.*

*"உங்கள் அயலானை சிநேகிப்பீர்களாக" என்று தேவன் சொல்லுகிறார், ஆனால் ஜனங்கள் ஒருவருக்கொருவர் பகைக்கிறவர்களாயிருக்கிறார்கள். "உங்கள் மனைவிக்கு உண்மையுள்ளவர்களாயிருங்கள், என்று தேவன் சொல்லுகிறார், ஆனால் மனுஷர்கள் தங்கள் சொந்த மனைவிகளை வஞ்சிக்கின்றனர்." "முதலாவதாக என்னைத் தேடுங்கள்" என்று தேவன் சொல்லுகிறார், அவர்களோ ஏதாவது மிச்சம் இருப்பதை தேவனுக்குக் கொடுக்கின்றனர். மனித வரலாற்று பதிவேடு கீழ்ப்படியாமையே பதியப்பட்ட ஒன்று.*

*4. நாம் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம் (2:3). நமது துன்மார்க்க வழியினால், சரியானவை எது என்று நாம் அறிந்திருந்தும் வேண்டுமென்றே கீழ்ப்படியாமல் போனோம், தேவ கோபாக்கினைக்கு ஆளானோம். சர்வலோக தேவனுக்கு முன்பாக பரிசுத்தமும் தூய்மையானவர்களுமாய் இருந்திருக்க வேண்டிய நாம் எந்த வித சந்தேகமுமில்லாமல் குற்றவாளிகளாய்க் காணப்பட்டோம். தேவனை திருப்திபடுத்தும் பொருட்டு அவருடைய நீதி எதிர்பார்ப்பவைகளை செய்யாமல் நித்திய ஆக்கினைக்கு ஒப்புக் கொடுத்தவர்களாய் தேவனுக்குப் புறம்பே காணப்பட்டோம். நமது சுய முடிவெடுப்பதிலும் செயல்படுவதிலும், நாம் நம்பிக்கையற்றவர்களாகவும் நமது மிக மோசமான விதியை மாற்றியமைக்க வழியற்றவர்களாயுமிருந்தோம்!*

*<u>நமது நிகழ்காலம்</u>. அதுதான் கெட்ட செய்தி - நமது சுயமாய் நமது சுய செயல்களை நாம் செய்வது. அடுத்து, பவுல் நமது பரிதாபமான நிலையிலிருந்து விடுபடச் செய்ய தேவன் செய்தது எதுவோ அதுவே நற்செய்தி என்றார். நம்மை நாமே இரட்சித்துக் கொள்ள நாம் என்ன செய்தோம் என்பது இங்கே வலியுறுத்தப்படுவதில்லை; அனைத்தும் தேவனுடைய செயல்.*

*1. நாம் உயிர்ப்பிக்கப்பட்டோம் (2:4, 5). செத்துப்போன மனிதன்*

உயிரோடு கொண்டு வரப் படவேண்டுமானால், அது கிருபையினால் மட்டுமே சாத்தியமாகும். அவன் தனக்குத்தானே என்ன செய்யக் கூடும்? எதுவுமில்லை. யாரோ ஒருவர் அவனுக்கு அதைச் செய்ய வேண்டும். அதினால்தான் இரட்சிப்பு கிருபையினால் கொடுக்கப்படுவது. தேவன் இரட்சிப்பை மனிதனுக்கு அருளிச்செய்யாதிருந்தால், அது சுலபமாய் செயல்படுத்தப்பட்டிருக்க முடியாது.

மரித்தவன் உயிர்ப்பிக்கப்படுவது எப்படி? ஏதோ *உதாரணத்தின்* மூலம் செய்ய முடியுமா? நாம் ஒரு பிணத்துக்கு முன்பாக ஓடி அல்லது குதித்து, "உயிரோடிருப்பவர்களாகிய நாங்கள் இப்படிதான் செய்வோம்" என்று சொல்லுகிறீர்களா? இல்லை, ஒரு நல்ல முன் உதாரணம் செத்துப் போன மனிதனின் பிரச்சனையைத் தீர்க்காது! ஆவிக்குரிய மரணத்தையும் இது மாற்றிவிட முடியாது.

*சுற்றுப்புற சூழல்* மூலம் செயல்படுத்தலாமா? செத்துப்போன அவனை ஒரு நகரப்பகுதிக்குக் கொண்டு போய் செல்வ செழிப்பில் வாழும் மக்களுக்கு அருகில் வைத்து முயற்சிக்கலாம். எப்படியாயினும் அது அவனுக்கு ஜீவனைக்கொடுக்காது.

இன்னொரு முயற்சி அவனை *ஊக்கப்படுத்துவது*. நாம் அவனிடத்தில் பேசலாம். மனவெழுச்சியைத் தூண்டி செயலுக்கம் கொடுக்கிற ஒரு நன்கு - அறியப்பட்ட பேச்சாளரை வரவழைத்து அவனுக்கு அறைகூவலாக: "எழுந்திரு! உன்னால் செயல்பட முடியும்! நேர்மறையாக சிந்தித்துப்பார்!" என்று சொல்ல வைக்கலாம்.

இவைகளில் எந்த ஒரு அணுகுமுறையும் வெற்றிதராது. மரித்த மனிதனுக்கு தேவை உயிர்ப்பு! தெய்வீக உயிர்த்தெழுதலுக்குக் குறைவாக எதுவும் நம்முடைய உண்மையான பிரச்சனைக்குத் தீர்வாகாது. தேவன் கீழிறங்கி வந்து நம்முடைய ஆவியோடே வாசம் பண்ண வேண்டும். கிறிஸ்து சொன்னார். "நானே ... ஜீவனுமாயிருக்கிறேன் (யோவான் 11:25). மரித்த மனிதன் நம்பிக்கையற்ற நிலையில் கிறிஸ்து அவனுக்குத் தேவைப்படுகிறார்."

கிறிஸ்தவம் என்பது வியாதிப்பட்டவன் சுகம் பெறும் மார்க்கமல்ல. அது மரித்த மனிதன் உயிர்பெறுவது. தேவனுடைய கிருபையின் ஐசுவரியத்தால், நாம் புதிய ஜீவனைப் பெற்றுக் கொள்ளக் கூடியவர்களாயிருக்கிறோம். நாம் மரித்தோரிலிருந்து கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பிக்கப்பட்டோம்.

2. நாம் ஒய்வு அளிக்கப்பட்டோம் (2:7). வேதாகமத்தில் உட்காருதல் என்பது வேலைசெய்து முடித்ததைக் குறிக்கும். உதாரணமாக, எபிரேய எழுத்தாளர் இயேசுவின் ஊழியம் லேவிய ஆசாரித்துவத்தைக் காட்டிலும் மேலானது என்று குறிப்பிட்டார்: "அன்றியும் எந்த ஆசாரியனும் நாடோறும் ஆராதனை செய்கிறவனாயும், பாவங்களை நிவர்த்தி செய்யக் கூடாத ஒரே விதபலிகளை அநேகந்தரம் செலுத்தி வருகிறவனாயும் நிற்பான். இவரோ (கிறிஸ்து) பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி என்றென்றைக்கும் தேவனுடைய வலது பாரிசத்தில் *உட்கார்ந்து*" (எபிரெயர் 10:11, 12; வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது).

இயேசுவின் இரட்சிப்பைக் கொடுக்கும் வேலை சிலுவையில் பூர்த்தியாயிற்று, எனவே அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார். நமது மீட்பையும் சுதந்தரத்தையும் செயல்படுத்த அவருக்கு வேறு எதுவும்

இருக்க வில்லை. அவருடைய மீட்பின் பணி செய்து முடித்தாயிற்று; இப்பொழுது அவர் நமது நித்திய ஜீவனை கிரயத்துக்குக் கொள்கிற விஷயத்தில் ஓய்ந்திருக்கலாம்.

பவுல் குறிப்பிடும்போது இப்பொழுது நாம் உன்னதங்களில் அவரோடே கூட உட்கார்ந்திருக்கிறோம் என்று சொன்னார். நாம் பரலோகத்தில் நமது இடத்தைப் பிடிக்க வெறித்தனமாக முயற்சிக்க வேண்டுவதில்லை. இயேசுவுக்குள் நித்திய ஜீவன் ஏற்கனவே நமதாயிற்று. நெடு நாட்களுக்கு முன் கதறி, "இதோ எல்லாம் முடிந்தது!" என்று சொன்னவருக்குள் நாம் இளைப்பாற வேண்டியவர்கள். தேவனுடைய கிருபையால், நம்முடைய இரட்சிப்பு சிலுவையிலே பாதுகாக்கப்பட்டு விட்டது.

*நமது வெற்றிவாய்ப்புநிலை.* நமது இரட்சிப்பு நிறைவேறும்போது, நாம் தேவனுடைய வெற்றிச் சின்னமாக மாறுகிறோம்: "கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்கிறார்" (2:6). எனவே வருங்கால நித்தியத்தில், மீட்கப்பட்டவர்கள் பரலோக சேனைகளுக்கு முன்பாக தேவனுடைய ஆச்சரியமான கிருபையால் வெற்றிச் சின்னங்களாக மிளிருவார்கள். தேவதூதர்கள் தேவனுடைய மகா மேன்மையான இரக்கத்தைக் கண்டு ஆச்சரியப்படுவார்கள். அவர்கள் உணர்ச்சிவசப் பட்டவர்களாய் நின்று நமது தேவன் பரிசுத்தமில்லாதவர்களாயிருந்தவர்களை பரிசுத்தமாக்கும் வழியை கண்டு கொண்டார் என்று உற்றுகவனிப்பார்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 7:9-12).

1. தேவனுடைய திட்டம் (2:8, 9). நாம் தேவனுக்கு மகிமையைக் கொண்டு வரத்தக்க ஒரு நித்திய காட்சிப் பொருளாயிருப்போமாகில், பிறகு நமது இரட்சிப்பை அடையச் செய்யும் ஒரு திட்டம் அவருக்கு இருந்தாக வேண்டும், அது குறித்து ஒருவரும் பெருமை பாராட்டக் கூடாது. அவருடைய திட்டம் என்ன? பவுல் "*கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள்;* இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவருமே பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினாலே உண்டானதல்ல" என்று சொன்னார் (2:8, 9; வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது).

கிருபையினாலே இரட்சிக்கப்படுவது என்றால் என்ன? அதன் பொருள் தேவன் ஒருவரையும் இரட்சிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கவில்லை, நாம் மரித்தவர்களாய் நித்திய நரகத்தில் போய்ச்சேர அவர் விட்டிருக்கலாம், அவர் தொடர்ந்து தமது பரிசுத்தத்தில் நிலைத்திருந்திருப்பார். அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால், அவர் செய்யக்கடமைப் பட்டிராத காரியத்தை நமக்காக செய்யும்படிக்கு அவர் மனமுவந்து தெரிந்து கொண்டார். கிருபையே தேவன் மனிதன் தனக்குத்தானே செய்து கொள்ளக் கூடாதவைகளை அவர் மனமுவந்து செய்ய தீர்மானித்ததின் விளைவு.

இதை அடையக்கூடிய ஒரே பொறுப்பு கீழ்ப்படியும் விசுவாசம் மட்டுமே. நாம் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும், விசுவாசத்துடன் அந்தத் திட்டத்தை கீழ்ப்படிதலோடு ஏற்றுக் கொள்ளும்போது, தேவன் நம்மை மன்னித்து நமக்கு புதிய ஜீவனைக் கொடுப்பார்.

நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தேவன் கேட்கும் அந்தத் திட்டம் என்ன? பெந்தெகோஸ்தே நாளில் பேதுரு முதல் முறையாக

*சுவிசேஷத்தை அறிவித்த போது கேட்கப்பட்ட அதே காரியம் தான், இன்றைக்கும் கேட்கப்படுகிறது: "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்பிற்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (நடபடிகள் 2:38).*

*தேவனுடைய திட்டம் கிருபையால் இடர்பாடுகளைக் கடந்து கொடுக்கப்பட்ட ஒன்று. விசுவாசத்தினாலே நாம் நமது வாழ்வில் அதைப் பின்பற்றும் போது அது நமக்கு மெய்யாக்கப்படுகிறது.*

*2. தேவனுடைய நோக்கம் (2:10). நாம் தேவனுடைய கிருபையின் வெற்றிச் சின்னங்களாக விளங்கப் பண்ணப்படும் நேரம் வரக் காத்துக் கொண்டிருக்கையில், நாம் செய்து கொண்டிருக்க வேண்டியது என்ன? "நற்கிரியைகளை செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்" (2:10).*

*நமது நற்கிரியைகளினாலே நாம் இரட்சிக்கப்படவில்லை. சபை ஆராதனையில் தவறாமல் கலந்து கொள்வது, வாரந்தோறும் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவது, பத்துக் கட்டளைகளைப் பின்பற்றுவது, நல்ல ஒரு அயலானாக இருப்பது, ஒழுக்கமும், மதிப்புமுடைய வாழ்க்கையை வாழ்வது ஆகியன நம்மை பரலோகத்துக்குக் கொண்டு செல்லாது.*

*ஆகிலும், தேவன் நாம் நற்கிரியை செய்ய வேண்டுவதில்லை என்று விரும்புவதாக அது பொருள்படாது. உண்மையில், வசனம் 10 தேவன் தமது கிருபையால் நம்மை இரட்சித்து நற்கிரியைகளைச் செய்ய நம்மை ஏதுவாக்கியிருக்கிறார் என்று போதிக்கிறது. எபேசியர் 4-6ல், நாம் செய்து கொண்டிருக்க வேண்டிய நற்கிரியைகளை பவுல் சொன்னார், அது நம்மை நமது சமுதாயத்தில் மரித்தவர்களாய் நடந்து கொண்டிருக்கிறவர்களிடமிருந்து நம்மை தனிமைப்படுத்தும். நாம் விரும்புகிறபடியெல்லாம் வாழ தேவன் நமக்கு புதிய ஜீவனைக் கொடுப்பதில்லை. நாம் அவருக்கு மகிமையைக் கொண்டு வரும்படி நமக்கு புதிய ஜீவனைக் கொடுக்கிறார். அவர் தமது கிருபையின் வெற்றிச் சின்னங்களாக இருக்கும்படி அவர் நம்மைத் தெரிந்து கொள்ளக் காரணம் இதுவே.*

*<u>முடிவுரை.</u> கடைசியில் ஒவ்வொருவரும் யாரோ ஒருவரின் வெற்றிச் சின்னமாக விளங்குவர். ஒருவர் முரட்டாட்டம் பண்ணி தேவனுக்கு விரோதமான செயலில் நிலைத்திருந்து பாவத்திலேயே மரித்தவராக இவ்வுலக வாழ்வை விட்டுப் போவாரானால் அவர் தமது நித்தியத்தை நரகத்தில்தான் கழிக்க வேண்டும், அங்கே சாத்தானுடைய தந்திரங்களின் வெற்றிச்சின்னமாக அவர் திகழுவார். அதற்கு மாறாக, கிறிஸ்துவினிடத்தில் விசுவாசத்தில் பொறுப்பேற்கும் நபர் தேவனுடைய கிருபையின் நித்திய வெற்றிச் சின்னமாக மாறுவார்.*

*கிறிஸ் புல்லார்ட்*

---

*குறிப்புகள்*

[1]Kenneth S. Wuest, *Wuest's Word Studies from the Greek New Testament for the English Reader: Ephesians and Colossians* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co.,

1953), 65. [2]William Barclay, *More New Testament Words* (New York: Harper & Brothers, 1958), 11–24. [3]Ibid., 21. [4]Wuest, 66. [5]Spiros Zodhiates, ed., *The Complete Word Study New Testament,* 2d ed. (Chattanooga, Tenn.: AMG Publishers, 1992), 967. [6]Andrew T. Lincoln, *Ephesians*, Word Biblical Commentary, vol. 42 (Dallas: Word Books, 1990), 110. [7]Ibid. [8]Ethelbert W. Bullinger, *A Critical Lexicon and Concordance to the English and Greek New Testament* (London: Samuel Bagster and Sons, n.d.; reprint, Grand Rapids, Mich.: Zondervan Publishing House, Regency Reference Library, 1975), 95. [9]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph Henry Thayer (Edinburgh: T. & T. Clark, 1901; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 511; see also Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 816–18.